THE HINDU - ENGLISH
Dated: 21.12.2024

# EVM row: SC moves former MLA's plea to another Bench

**The Hindu Bureau**
NEW DELHI



A petition filed by five-time former MLA Karan Singh Dalal seeking directions to the Election Commission (EC) to lay down a policy or memorandum for checking and verifying the original burnt memory or microcontroller of electronic voting machines (EVMs) was shuttled to another Bench, the third in a row, in the Supreme Court, on Friday.

A Bench led by Chief Justice of India Sanjiv Khanna said the petition would be heard by a Bench headed by Justice Dipankar Datta.

On December 13, a Bench headed by Justice Vikram Nath had bowed out of hearing the case after opining that the Bench headed by Chief Justice Khanna ought to hear it. The opinion was based on the fact that Justice Khanna (as he was then) had heard and pronounced a judgment on EVMs in April.

Mr. Dalal has argued that the original burnt memory/microcontroller of the control unit, ballot unit, Voter Verified Paper Audit Trail (VVPAT) and symbol loading unit must not be deleted.

The April 26 judgment directed that the burnt memory of microcontrollers of the five per cent of EVMs can be checked and verified by a team of engineers of the EVM manufacturers in case of any suspicion of tampering.

"The exercise would be initiated on a written request from candidates who come second or third in the victor's tally," the judgment had said. The application for verification should be sent within seven days of the declaration of the election results.

DT-Next

Dated: 21-12-2024

# New Bench to hear EVM plea: CJI

NEW DELHI: The Supreme Court on Friday said the plea seeking a policy for verification of electronic voting machines will be heard by a Bench headed by Justice Dipankar Datta in January next year.

A Bench comprising Chief Justice of India (CJI) Sanjiv Khanna and Justice Sanjay Kumar said the fresh plea of former Haryana minister and five-time MLA Karan Singh Dalal and one Lakhan Kumar Singla on the issue will be heard by a bench headed by Justice Datta in the week commencing January 20, 2025.

Supreme Court Bench consisting of Justice Khanna and Justice Datta had delivered a verdict earlier in April rejecting the demand for bringing back the old paper ballots.

At outset, senior advocate Maninder Singh, appearing for the Election Commission of India, sought dismissal of the plea, saying that similar petitions for same reliefs were rejected earlier.

D.T. NEXT
Dated: 21. 12. 2024

# ONOE Bill: BJP's Chaudhary appointed as Parl panel chief

**NEW DELHI: BJP member PP Chaudhary was on Friday appointed chairman of the mega joint committee of Parliament set up to examine bills proposing simultaneous elections to the Lok Sabha and state assemblies.**

Lok Sabha Speaker Om Birla constituted the 39-member committee and appointed Chaudhary, a former Union minister of state for law and justice, as its chairman.

Earlier, Union Law Minister Arjun Ram Meghwal had moved resolutions in the Lok Sabha and the Rajya Sabha to refer the Constitution (129th Amendment) Bill and the Union Territories Laws (Amendment) Bill to a joint committee of the two Houses.

The government decided to increase the committee's strength from 31 to 39 as more political parties expressed desire to be part of the exercise to examine the two draft legislations that seek to fulfil the saffron party's long-cherished promise of implementing simultaneous elections across the nation.

Former Union ministers Anurag Thakur, Parshottam Rupala, Manish Tewari and several first-term lawmakers, including Priyanka Gandhi Vadra, Bansuri Swaraj and Sambit Patra, are members of the committee.

The panel has 27 members from the Lok Sabha and 12 from the Rajya Sabha.

The two 'one nation, one election' bills, including one requiring an amendment in the Constitution, laying down the mechanism to hold simultaneous elections, were introduced in the Lok Sabha on Tuesday after a fiery debate.

"The government agreed that the matter is very important and it relates to the reformation of the election process of our country, so we agreed to include most of the prominent political parties," Parliamentary Affairs Minister Kiren Rijiju told reporters.

THE HINDU- TAMIL
Dated: 21.12.2024

# ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவை ஜேபிசி-க்கு அனுப்ப தீர்மானம் நிறைவேற்றம்

புதுடெல்லி

ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவை நாடாளுமன்ற கூட்டுக் குழுவுக்கு (ஜேபிசி) அனுப்ப மக்களவையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் கடந்த நவம்பர் 25-ம் தேதி தொடங்கியது. இந்த கூட்டத் தொடரில் அதானி விவகாரத்தை எழுப்பி எதிர்க் கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டன. இதனால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் பல நாட்கள் முடங்கின. இதன்பிறகு ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி, எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணி இடையே உடன்பாடு எட்டப் பட்டு இரு அவைகளும் செயல்பட தொடங்கின.

கடந்த நவம்பர் 26-ம் தேதி பழைய நாடாளுமன்ற கட்டிடத்தில் அரசியல மைப்பு தினத்தின் 75-வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. இதுதொடர்பாக இரு அவைகளிலும் விவாதம் நடை பெற்றது. இந்த சூழலில் கடந்த 17-ம் தேதி சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால், மக்களவையில் ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவை அறிமுகம் செய்தார்.

இதற்கு எதிர்க்கட்சி எம்பிக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து மசோதாவை தாக்கல் செய்யலாமா, வேண்டாமா என்பது குறித்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மசோதாவுக்கு ஆதரவாக 269 பேரும், எதிராக 198 பேரும் வாக்களித்தனர்.

இதைத் தொடர்ந்து ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதா மக்களவையில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மசோதா தொடர்பாக ஆளும் கூட்டணி, இண்டியா கூட்டணி எம்பிக்கள் இடையே காரசார மான வாக்குவாதங்கள் நடைபெற்றன. இறுதியில் நாடாளுமன்ற கூட்டுக் குழு (ஜேபிசி) பரிசீலனைக்கு மசோதாவை அனுப்ப சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் பரிந்துரை செய்தார். இதன்படி பாஜகவைச் சேர்ந்த பி.பி.சவுத்ரி எம்.பி. தலைமையில் 39 எம்.பி.க்கள் அடங் கிய ஜேபிசி அமைக்கப்பட்டு உள்ளது. குளிர்கால கூட்டத் தொடரின் இறுதி நாளான நேற்று ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவை ஜேபிசி-க்கு அனுப்ப மக்க ளவையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவை நிறைவேற்ற நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவை. இதன்படி மக்களவையில் மொத்தமுள்ள 543 எம்பிக்களில் ஆளும் கூட்டணிக்கு 362 எம்பிக்களின் ஆதரவு தேவை. இதேபோல மாநிலங்களவையில் மொத்தமுள்ள 245 எம்பிக்களில் 164 எம்பிக்களின் ஆதரவு தேவை. ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு இல்லாத நிலையில் அனைத்து கட்சிகளிடமும் கருத்தொற்றுமையை ஏற்படுத்த தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

THE HINDU- TAMIL
Dated: 21.12.2024

### இரட்டை இலை விவகாரத்தில் தேர்தல் ஆணையத்துக்கு

# 8 வார அவகாசம் கோரிய மனு தள்ளுபடி

சென்னை

இரட்டை இலை சின்னம் தொடர்பான புகாரை பரிசீலித்து முடிவு எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு மேலும் 8 வாரம் காலஅவகாசம் வழங்க வேண்டும் எனக்கோரி திண்டுக்கல் சூரியமூர்த்தி தாக்கல் செய்திருந்த மனுவை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பாக நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்குகள் முடிவுக்கு வரும்வரை அதிமுகவுக்கு இரட்டை இலைசின்னத்தை ஒதுக்கக்கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு அளித்த மனு மீது உரிய விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரி திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி ஏற்கெனவே உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அந்த வழக்கை டிச.4 அன்று விசாரித்த நீதிபதிகள், அந்த வழக்கில் எதிர்மனுதாரர்களாக உள்ள முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் விசாரணைக்கு அழைத்து, அவர்களின் கருத்துகளையும் கேட்டு 4 வார காலத்தில் இரட்டை இலை சின்னம் தொடர்பாக முடிவு எடுக்க வேண்டும், என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தனர்.

இந்த உத்தரவின் அடிப்படையில் இதுதொடர்பான எழுத்துப்பூர்வமான விளக்கத்தை டிச.19-க்குள்ளாக அளித்து, டிச.23-ம் தேதி டெல்லியில் தலைமை தேர்தல் ஆணையத்தில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்கும்படி ஓ.பன்னீர்செல்வம், பழனிசாமி, புகார்தாரரான சூரியமூர்த்தி ஆகியோருக்கு தேர்தல் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

இந்நிலையில் சென்னை உயர் நீதிமன்றத்தில் சூரியமூர்த்தி தாக்கல் செய்திருந்த மற்றொரு மனுவில், ''இந்த விவகாரம் தொடர்பாக பழனிசாமி கடந்த மார்ச் மாதம் தாக்கல் செய்திருந்த பதில்மனு எனக்கு வழங்கப்படவில்லை. எனவே அதற்கேற்ப எனது கருத்தை தெரிவிக்க முடியவில்லை என்பதால் இரட்டை இலை சின்னம் தொடர்பான எனது புகார் மீது பரிசீலித்து முடிவெடுக்க தேர்தல் ஆணையத்துக்கு மேலும் 8 வாரம் காலஅவகாசம் அளிக்க வேண்டும்'' எனக் கோரியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இந்த மனுவை விசாரணைக்கு ஏற்க முடியாது எனக் கூறி தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

DAILY THANTHI Dated: 21.12.2024

### தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு

# வாக்குப்பதிவு எந்திரங்களை சரிபார்க்கும் கொள்கை வகுக்கக்கோரி வழக்கு

## சுப்ரீம் கோர்ட்டில் அடுத்த மாதம் விசாரணை

புதுடெல்லி, டிச.21-
தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை சரிபார்க்கும் கொள்கை வகுக்கக்கோரி சுப்ரீம்கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்கு வருகிறது.

### தள்ளுபடி

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களுக்கு பதிலாக பழைய பாணியில் வாக்குச்சீட்டு முறையில் தேர்தல் நடத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை கடந்த ஏப்ரல் மாதம் நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, திபங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு தள்ளுபடி செய்தது.

இருப்பினும், தேர்தலில் இரண்டு மற்றும் மூன்றாம் இடம் பெற்று தோல்வி அடைந்தவர்கள், சட்டசபை தொகுதிக்கு 5 சதவீத மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பொருத்தப்பட்ட மைக்ரோசிப்களை சரிபார்க்க தேர்தல் கமிஷனிடம் கோரிக்கை வைக்கலாம் என்றும் நீதிபதிகள் கூறினர்.

### முன்னாள் மந்திரி மனு

இதற்கிடையே, அரியானா மாநில சட்டசபை தேர்தலில் தோல்வி அடைந்த முன்னாள் மந்திரியும், 5 தடவை எம்.எல்.ஏ.வாக இருந்தவருமான கரன்சிங் தலால் மற்றும் லக்கன் குமார் சிங்லா ஆகியோர், மேற்கண்ட உத்தரவை சுட்டிக்காட்டி, சுப்ரீம்கோர்ட்டில் ஒரு மனு தாக்கல் செய்தனர்.

அதில், தேர்தல் முடிவுகள் வெளியான 8 வாரங்களுக்குள் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள், 'விவிபாட்' எந்திரங்கள் உள்ளிட்ட 4 சாதனங்களில் பொருத்தப்பட்ட மைக்ரோ கண்ட்ரோலர்களை சரிபார்க்கும்வகையில் ஒரு வலுவான கொள்கை வகுக்க தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட வேண்டும்என்று அவர்கள்கோரிக்கை விடுத்திருந்தனர்.

சுப்ரீம்கோர்ட்டின் முந்தைய உத்தரவை தேர்தல் கமிஷன் பின்பற்றவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டினர்.

### ஜனவரி மாதம் விசாரணை

தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதி சஞ்சய் குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு நேற்று இம்மனு விசாரணைக்கு வந்தது.

தேர்தல் கமிஷன் சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் மனிந்தர் சிங், இதே கோரிக்கையை விடுத்த பல மனுக்கள் முன்பே தள்ளுபடி செய்யப்பட்டதால், இதையும் தள்ளுபடி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கு நீதிபதிகள், "நீதிபதி திபங்கர் தத்தா தலைமையிலான அமர்வு முன்பு ஜனவரி 20-ந் தேதி தொடங்கும் வாரத்தில் இந்த மனு விசாரணைக்கு வரும்" என்று கூறினர்.

DAILY THANTHI Dated: 21.12.2024

இரட்டை இலை சின்னம் விவகாரம்:

# தேர்தல் ஆணையம் முடிவு எடுக்க அவகாசம் கோரிய மனு தள்ளுபடி

## ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, டிச.21-

இரட்டைஇலைசின்னம் விவகாரம் தொடர்பாக மனுவை பரிசீலிக்க தேர்தல் ஆணையத்துக்கு 8 வார அவகாசம் வழங்க கோரிய மனுவை தள்ளுபடி செய்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

### இரட்டை இலை

திண்டுக்கலைச்சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவில், "அ.தி.மு.க., தொடர்பான சிவில் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை, அ.தி.மு.க.வுக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்கக்கூடாதுஎன்றுதேர்தல்ஆணையத்துக்கு மனு அளித்தேன். அந்த மனுவை பரிசீலிக்க உத்தரவிடவேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு, அ.தி.மு.க., பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் என்று அனைத்து தரப்பினரின் கருத்துகளை கேட்டு, சூரியமூர்த்தியின் மனுவை 4 வாரத்துக்குள் பரிசீலித்து முடிவு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

### ஆஜராக வேண்டும்

இதற்கிடையில்,எழுத்துப்பூர்வமான விளக்கத்தை அளிக்கவேண்டும். வருகிற 23-ந்தேதி நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம்,சூர்யமூர்த்தி ஆகியோருக்கு தேர்தல் ஆணையம் சம்மன் அனுப்பியது.

இந்தநிலையில், இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்குவந்தது.அப்போது சூரியமூர்த்தி தரப்பில், இந்த விவகாரம் தொடர்பாக கடந்த மார்ச் மாதம் எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த பதில் மனு எனக்கு வழங்கப்படவில்லை.

### தள்ளுபடி

இதனால், எனது கருத்துகளை தெரிவிக்கும்விதமாக எனது மனுவை பரிசீலித்து முடிவெடுக்கதேர்தல் ஆணையத்துக்கு 8 வார கால அவகாசம் வழங்க வேண்டும் என்று மனு தாக்கல்செய்யப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள், அதை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

Daily THANTHI
Dated: 21.12.2024

# தி.மு.க. எம்.எல்.ஏ. மீதான தேர்தல் வழக்கு ரத்து

## ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, டிச.21-
நாடாளுமன்றத் தேர்தல் கடந்த
2019-ம் ஆண்டு நடந்தது. அப்போது ராமநாதபுரம் மாவட்ட,
கமுதி காவடிப்பட்டியில் உள்ள மணிமண்டப சுவற்றில் எவ்வித
முன் அனுமதியும் பெறாமல், தி.மு.க. சின்னம் வரைந்து விளம்ப
ரம் செய்யப்பட்டது. அப்போது கமுதி-அருப்புக்கோட்டை
சாலையில் ரோந்து பணியில் ஈடுப்பட்ட இன்ஸ்பெக்டர் அந்த
விளம்பரத்தை அகற்றும்படி தி.மு.க. மாவட்டச் செயலாளரும்,
தற்போதைய ராமநாதபுரம் எம்.எல்.ஏ.வுமான காதர்பாட்சா
என்ற முத்துராமலிங்கத்திடம் கூறியுள்ளார். ஆனால், அந்த
விளம்பரத்தை அகற்ற அவர் மறுத்துவிட்டார். இதையடுத்து
முத்துராமலிங்கம் மீது தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாகவும்,
பொதுச்சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்தியதாகவும் கமுதி போலீ
சார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு ராமநாதபுரம்
செசன்சு கோர்ட்டில் நிலுவையில் உள்ளது.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி சென்னை ஐகோர்ட்டில்
முத்துராமலிங்கம் மனு தாக்கல் செய்தார். இந்த மனு நீதிபதி
பி.வேல்முருகன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த
வழக்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பொய்யாக பதிவு
செய்யப்பட்டது. தவறான சட்டப்பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்
டப்பட்டுள்ளது என்று மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

போலீஸ் தரப்பில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வாதிடப்பட்
டது. இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, வழக்கை ரத்து
செய்து உத்தரவிட்டார்.

DINAMALAR
Dated: 21.12.2024

# இரட்டை இலை விவகாரம் அவகாசம் நீட்டிப்பு இல்லை

சென்னை, டிச. 21–

நிலுவையில் உள்ள சிவில் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை, இரட்டை இலை சின்னத்தை அ.தி.மு.க.,வுக்கு ஒதுக்க தடை கோரிய விண்ணப்பத்தின் மீது முடிவெடுக்க, அவகாசம் நீட்டிக்க கோரிய மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

திண்டுக்கல்லைச் சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் தாக்கல் செய்த மனுவில், 'அ.தி.மு.க.,வின் உள்கட்சி விவகாரம் தொடர்பாக, பல புகார்களை தேர்தல் ஆணையத்துக்கு அளித்துள்ளேன்.

'கட்சி பிரச்னை தொடர்பான சிவில் வழக்குகள் முடிவுக்கு வரும் வரை, இரட்டை இலை சின்னத்தை அ.தி.மு.க.,வுக்கு ஒதுக்கக்கூடாது எனவும் ஆணையத்திடம் கோரி உள்ளேன். மனு மீது விசாரணை நடத்த, தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

மனு, நீதிபதிகள் ஆர். சுப்ரமணியன், சி.குமரப்பன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, விண்ணப்பம் குறித்து, நான்கு வாரங்களில் தேர்தல் ஆணையம் முடிவெடுக்க, நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர்.

இதையடுத்து, நாளை மறுதினம் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க, பழனிசாமி, பன்னீர்செல்வம், சூரியமூர்த்தி ஆகியோருக்கு. தலைமை தேர்தல் ஆணையம் 'நோட்டீஸ்' அனுப்பியது.

இந்நிலையில், இந்தப் பிரச்னையில், கடந்த மார்ச்சில் பழனிசாமி தாக்கல் செய்திருந்த பதில் மனு, தனக்கு வழங்கப்படாததால் கருத்து தெரிவிக்க முடியவில்லை; எனவே, தன் மனுவின் மீது முடிவெடுக்க, தேர்தல் ஆணையத்துக்கு எட்டு வார அவகாசம் வழங்கும்படி, சூரியமூர்த்தி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மனு, நீதிபதிகள் ஆர். சுப்ரமணியன், சி.குமரப்பன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

நான்கு வாரங்களில் மனு மீது முடிவெடுக்கும் என தேர்தல் ஆணையம் தெரிவித்ததால், அவகாசம் நீட்டிப்பு வழங்க மறுத்து மனுவை தள்ளுபடி செய்து, நீதிபதிகள் உத்தரவிட்டனர்.